**செய்தி வெளியீடு எண்: 039** **நாள்: 12.01.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

ஹஜ் 2018ல் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் மூலம் புனித ஹஜ் பயணம் மேற்கொள்வதற்காக சுமார் 9500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழுவானது இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு 3542 ஹஜ் பயண இருக்கைகள் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டிற்கு கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 3,189 இருக்கையைவிட இந்த ஆண்டு கூடுதலான இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியதின் பலனாக இந்த ஆண்டு, கடந்த ஆண்டைவிட கூடுதலாக 353 ஹஜ் பயண இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சிறப்பு வகையின் கீழ் ஒதுக்கீடு செய்தது போக எஞ்சியுள்ள 3300 பொது வகை பயணிகளை குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியானது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலும், தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் ஹாஜி ஜனாப் அப்துல் ஜப்பார் அவர்கள் முன்னிலையிலும் 17.01.2018 அன்று காலை 11.00 மணியளவில் சென்னை, இராயப்பேட்டையிலுள்ள புதுக்கல்லூரி ஆணைக்கார் அப்துல் சுக்கூர் அரங்கத்தில் நடைபெறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**